முருகப்பெருமான் துணை

**மகான் கூர்மானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.01.2024,** புதன்கிழமை

1. ஓங்கார ஞான அவதாரமே
ஓங்கார குடில் படைத்த அரங்கனே
ஓங்கார உலகம் படைக்க வந்த
ஓங்காரனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலை திங்கள்
குறைவிலா தசதிகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 10 ம் நாள், 24.01.2024, புதன்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க கூர்மானந்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மையான ஞானவான்கள் படைதனை
ஞானவழிகாட்டி அமைக்க வந்த
ஞானி அரங்கன் கொள்கை ஏற்று
4. ஏற்றுமே உலகமக்கள் வந்து
ஏழாம்படை வீடென்னும் அரங்கனின்
ஆற்றல்மிக்க பிரணவக்குடில் வந்து
ஆசி தீட்சைதனை குருவே என
5. என ஏற்று சரணாகதி அடைந்து
எல்லாம் வல்ல முருகப்பெருமானின்
ஞானம் தா என வேண்டி மக்கள்
நம்பிக்கை வைத்து வருதல் காண
6. காணவே ஞான சபையாகவே
கலியினில் அரங்கன் சபை சிறந்து
ஞான பூமியாக இந்த உலகை மாற்றும்
நல் சேவை விரிந்து வளர்ந்து

7. வளர்ந்து சுத்த சைவ நெறி
வறுமை வெல்லும் தரும நெறி
தளர்வின்றி வளர்ந்து சிறந்து
தரணியே வளமும் நலமும் காணும்

8. காணவே அரங்கன் தேர்வு செய்யும்
கலியினில் ஞானவான்கள் படை
ஞான சமூகம் படைப்பது மட்டுமல்லாது
ஞானத்தலைமையும் உருவாக்கும் வண்ணம்

9. வண்ணமுடன் நிலைகள் தேறி
வரும் காலம் ஆன்மீக அரசியல்
மண்ணுலகில் களமாக மாறியே
மனிதர்கள் ஆட்சி முடிவுறும் வகை

10. வகைபட எங்கும் எதிலுமே
வள்ளல் தன்மை வல்லமையும்
மிகைபட கொண்டச் சூழலாகவே
முழுமையான தேற்றம் கண்டு

11. கண்டுமே ஞானத்தலைமையும்
கலியினில் ஞானசித்தர் காலமாக
உண்டாகும் ஞான ஆட்சி பலமாகவே
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—